



முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பகுதி செயலாளர்கள் – அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் – வட்டக் கழக செயலாளர்கள் கூட்டம் மாவட்டக் கழக அலுவலகத்தில் அவைத்தலைவர் து.விக்டர் தலைமையில் நேற்று (26.07.2024 – வெள்ளிக்கிழமை) நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு பங்கேற்று பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து நடைபெறவுள்ள கண்டன ஆர்ப்பாட்டம் குறித்து எடுத்துரைத்து சிறப்புரையாற்றினார். இதில் சட்டமன்ற உறுப்பினர் நா.எழிலன், பகுதி செயலாளர்கள் ந.இராமலிங்கம், மா.பா.அன்புதுரை, ஏஆர்பி.எம்.காமராஜ், எஸ்.மதன்மோகன், ச.பரமசிவம், ஐ.கென்னடி, கலை கதிரவன், மாவட்ட நிர்வாகிகள் வி.எஸ்.கலைச்செல்வன், ஆ.சங்கீதா, ஜெ.எஸ்.அகஸ்டின்பாபு, அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.





சென்னை வடக்கு மாவட்ட இளைஞரணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு 41 அணிகள் பங்கேற்ற மாபெரும் இறகுபந்து போட்டி பரிசளிப்பு விழா வேலவன் உள்விளையாட்டரங்கில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கட்பீஸ்.ப.சோமசுந்தரமூர்த்தி தலைமையில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, முன்னிலையில் நடைபெற்றது. லயோலா.கே.மதன், இர.பொன்இளவரசன், வை.கௌதமன், இ.ரவிகுமார், ச.தமிழ்செல்வன் ஆகியோர் வரவேற்புரையில் மாநில இளைஞரணி துணை செயலாளர் பிரபு கஜேந்திரன், மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, ஐட்ரீம்.ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ, ஆகியோர் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்களுக்கு முதல் பரிசாக ரூ.20,000 மற்றும் பரிசு கோப்பை, இரண்டாம் பரிசாக ரூ.15,000 மற்றும் பரிசு கோப்பை,மூன்றாம் பரிசாக ரூ.10,000 மற்றும் பரிசு கோப்பை,கலந்து கொண்ட விளையாட்டு வீரர்கள் அனைவருக்கும் நினைவுபரிசு வழங்கினர். இந்நிகழ்வில் இரா.செந்தில்குமார், வ.பெ.சுரேஷ், இரா.லட்சுமணன், கி.ராஜேந்திரன், என்.மருதுகணேஷ், வெ.சு.சத்தியநாராயணன், லயன்.எம்.தீனதயாளன், பீ.சதீஷ்குமார், லட்சுமி வேலு, காட்டன்.ஜி.சதீஷ்குமார், ஆர்.டி.ராஜா, நெல்லை.எம்.எம்.சாமி, ப.ஆ.சண்முகம் மற்றும் மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், விளையாட்டு வீரர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமை! கலைஞர் தமிழ்ச் சங்கம் சார்பில்

## காரைக்குடியில் - கலைஞர் நூற்றாண்டு நிறைவு சிறப்புப் பட்டிமன்றம்!

### நடுவர்: சுகிசிவம்! முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் – நிகழ்ச்சி ஏற்பாடு!

காரைக்குடி, ஜுலை 27-

அளவற்ற அன்பும் நிகரற்ற கொள்கைப் பற்றும் ஈடற்ற உழைப்பும் மாசற்ற மாண்பும் தகைசால் தலைமைப் பண்பும் தன்னகத்தே கொண்டிருக்கும் தன்னரிகரில்லாத் தலைவர் - ஒப்பில்லா திராவிட மாடல் முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களால் 1998ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் துவக்கி வைக்கப்பட்டது,

காரைக்குடி கலைஞர் தமிழ்ச் சங்கம்! கலைஞர் தமிழ்ச்சங்கத்தின் சார்பில் 27.7.2024 அன்று மாலை 4.00 மணியளவில் காரைக்குடி பி.எல்.பி. திருமண மண்டபத்தில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளரும் கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன் தலைமை வகிக்கிறார்.

கலைஞர் தமிழ்ச் சங்கப் புரவலர் பழ.படிக்காசு முன்னிலை வகிக்கிறார்.

காரைக்குடி மாநகராட்சி மேயர் சே. முத்துத்துரை வரவேற்புரையாற்றுகிறார்.

திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., சா.மாங்குடி எம்.எல்.ஏ., முன்னாள் எம்.எல்.ஏ., சுப. துரைராசு, காரைக்குடி மாநகராட்சி துணை மேயர் நா.குணசேகரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பா.செந்தில் குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

காரைக்குடி கலைஞர் தமிழ்ச்சங்க நிறுவனர் - முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் துவக்கவுரை யாற்றுகிறார்.

இந்நிகழ்வில் - கலைமாமணி சுகிசிவம் அவர்களை நடுவராகக் கொண்டு - "கலைஞரை உலகம் புகழப் பெரிதும் காரணம் - எழுதுகோலே! செங்கோலே!" எனும் தலைப்பில் சிறப்புப் பட்டிமன்றம் நடைபெறுகிறது.

"எழுதுகோலே!" எனும் தலைப்பில், திருமதி தெ. சாந்தமணி, எழுத்தாளர் லெட்சுமணப் பெருமாள், கவிஞர் திருமதி ஆண்டாள் பிரியதர்ஷினி ஆகியோரும்-

"செங்கோலே!" எனும் தலைப்பில் - கவிஞர் மதுக்கூர் இராமலிங்கம், முனைவர் திருமதி எழிலரசி, செ.மோகனசுந்தரம் ஆகியோரும் வாதிடுகின்றனர்.

கலைஞர் தமிழ்ச் சங்கச் செயலர் தி.செந்தில்குமார் நன்றி கூறுகிறார்.

"முத்தமிழறிஞர் கலைஞரின் தமிழ்ச் சொந்தங்களே! தமிழ் ஆர்வலர்களே! இந்நிகழ்வில் பங்கேற்க வருக! வருக!" - என கலைஞர் தமிழ்ச் சங்கத்தின் நிறுவனரும், விழா ஏற்பாட்டாளருமான மு. தென்னவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### கழக விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் சகோதரி

## திருமதி யமுனா மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஆறுதல்!



சென்னை, ஜுலை 27 -

கழக விவசாய அணிச் செயலாளரும், தமிழ்நாடு அரசின் புதுடெல்லி சிறப்புப் பிரதிநிதியுமான ஏ.கே.எஸ். விஜயனின் சகோதரியும் தஞ்சை ஈஸ்வரி நகரைச் சேர்ந்த மருத்துவர் சம்பத்குமார் மனைவியுமான திருமதி யமுனா அவர்கள் (வயது 67) நேற்று (26.07.2024) காலை உடல் நலக் குறைவு காரணமாக இயற்கை எய்தினர் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த யமுனா - டாக்டர் சம்பத்குமார் இணையருக்கு டாக்டர் அருண், டாக்டர் அசோக் ஆகிய இரு மகன்கள் உள்ளனர்.

தஞ்சை ஈஸ்வரி நகரில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்ட உடலுக்கு கழகத்தினர் ஏராளமானோர் அஞ்சலி செலுத்தினர். அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (27ஆம் தேதி )காலை 10 .00மணி அளவில் அவரது இல்லத்தில் இருந்து புறப்படும் .

இம் மறைவுச் செய்தியறிந்து - அன்னாரின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்த செய்தியில்,

**"புதுடெல்லியில் தமிழ் நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதியாக உள்ள ஏ.கே.எஸ்.விஜயன் அவர்களின் சகோதரி திருமதி யமுனா அவர்கள் இயற்கை எய்திய தகவல் அறிந்து உடனடியாக, திரு. ஏ.கே.எஸ்.விஜயன் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, என்னுடைய ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொண்ட தோடு, அவருக்கு ஆறுதலையும் தெரிவித்தேன்"**

- என்று குறிப்பிட்டுள்ளார்.

### தர்மபுரி – தொப்பூர்

## தேசிய நெடுஞ்சாலைப் பணிகள் விரைவில் தொடங்கப்படும்!

### முன்னாள் எம்.பி. டாக்டர் செந்தில் குமாருக்கு ஒன்றிய அமைச்சர் நிதின் கட்கரி கடிதம்!

புதுடெல்லி, ஜுலை 27-

தர்மபுரி - தொப்பூர் தேசிய நெடுஞ்சாலை பணிகள் விரைவில் தொடங்க இருப்பதாக தர்மபுரி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் செந்தில்குமாருக்கு சாலை போக்கு வரத்துத் துறை அமைச்சர் நிதின் கட்கரி கடிதம் எழுதியுள்ளார்.

இது குறித்த விவரம் வருமாறு:

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் டி.என்.பி.எஸ்.செந்தில்குமார் கடந்த சில தினங்களுக்கு முன்பு டெல்லி சென்று அங்கு பழங்குடியினர் விவகா ரத் துறை அமைச்சர் ஜில் ஓரம் அவர்களை சந்தித்து குறும்பர் லம்பாடி இன மக்களை பழங்குடி பட்டியலில் இணைக்கும் தொடர் முயற்சியின் 17 வது தனிநபர் மசோதா குறித்து நடவடிக்கை எடுக்க நேரில் சென்று வலியுறுத்தி இருந்தார்.

தொடர் நடவடிக்கையாக ஒன்றிய கப்பல் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சக அதிகாரிகளை டெல்லியில் சந்தித்து தொப்பூர் மலைப்பாதை சீரமைப்பு மற்றும் ஏற்கனவே கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்ட பாளையம்புதூர் பகுதியில் மேம்பாலம் மற்றும் அகரம் கூட்ரோடு பகுதியில் மேம்பாலம் அமைப்பது குறித்து அனுப்பப்பட்ட கடிதம் குறித்து அதிகாரிகளிடம் அறிவுறுத்தி இருந்திருந்தார். அதன் தொடர் நடவடிக்கையாக ஒன்றிய கப்பல் மற்றும் சாலை போக்குவரத்து துறை அமைச்சர் நிதின் கட்கரி தர்மபுரி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செந்தில்குமாருக்கு கடிதம் மூலம் தனது பதிலை அனுப்பி உள்ளார் .

அதில் தொப்பூர் மலைப்பாதை என்எச் 44 பாதை சீரமைப்பணிகள் விரைவில் தொடங்க இருப்பதாகவும் மற்றொரு கடிதத்தில் காரிமங்கலம் அகரம் பகுதி மற்றும் பாளையம்புதூர் பகுதியில் சாலையை கடக்கும் பகுதியில் மேம்பாலம் கோரிக்கை குறித்து அப்பகுதியில் அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டு Underpass சாலை அமைக்க அதிகாரிகள் ஆய்வு செய்து வருவதாகவும் அமைச்சர் பதில் கடிதம் அனுப்பியுள்ளார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா!

## சீதை பதிப்பகத்தின் 32 நூல்கள் அறிமுகம்!

### நூல்களை – கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. வெளியிடுகிறார்! அரசு கொறடா கோவி.செழியன் பெற்றுக் கொள்கிறார்!

சென்னை, ஜுலை 27-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு சீதை பதிப்பகத்தின் 32 நூல்கள் அறிமுக விழா நடைபெறுகிறது.

நாளை (28.7.2024 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணியளவில் சென்னை- தியாகராயர் நகர் - ஜி.என்.செட்டி சாலையில் அமைந்துள்ள சர்.பிட்டி. தியாகராயர் அரங்கில் நடைபெறும் இவ்விழாவுக்கு மூத்த பத்திரிகையாளர் கோவி. லெனின் தலைமை வகிக்கிறார்.

கௌரா ராஜசேகரன் வரவேற்புரையாற்றுகிறார்.

32 நூல்களையும் - கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. வெளியிட்டுச் சிறப்புரையாற்றுகிறார்.

நூல்களை - தமிழ்நாடு அரசு கொறடா கோவி. செழியன் பெற்றுக்கொள்கிறார்.

இவ்விழாவில் - திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் துணைப் பொதுச் செயலாளர் தோழர் உமா, திராவிட இயக்க ஆய்வாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி, திராவிட இயக்க உணர்வாளர் முனைவர் இரா.குணசேகரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

### ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து இன்று ஆர்ப்பாட்டம்!

## கழக மீனவரணியினர் பெருமளவில் பங்கேற்போம் வாரீர்!

### கழக மீனவரணிச் செயலாளர் டாக்டர் அ.ஜோசப் ஸ்டாலின் அறிக்கை!

சென்னை, ஜுலை 27

கழக மீனவரணிச் செயலாளர் டாக்டர் அ.ஜோசப் ஸ்டாலின் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து நடத்தப்படும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் மீனவரணியினர் அனைவரும் பங்கேற்க வேண்டும் என கழக மீனவரணிச் செயலாளர் ஏ.ஜோசப் ஸ்டாலின் அறிக்கை வருமாறு:

ஒரு நாட்டின் நிதிநிலை அறிக்கை, அனைத்து மாநிலங்களுக்கும் உரிய பங்கினைப் பகிர்ந்தளித்து சமச்சீரான வளர்ச்சியை உருவாக்கிட உதவுவதுடன், நாட்டில் வாழும் கடைக்கோடி மனிதர்களின் வாழ்வை மேம்படுத்தும் கொள்கைப் பிரகடனமாகவே இதுவரை இருந்து வந்திருக்கிறது. ஆனால், இந்த ஆண்டிற்கான ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை, ஒட்டுமொத்த இந்திய நாட்டிற்கான நிதிநிலை அறிக்கையாகத் தெரியவில்லை. மாறாக, அரசியல் காரணங்களுக்காக பீகார் மற்றும் ஆந்திரா மாநிலங்களை ஆளுவோருடன் மேற்கொள்ளப்பட்ட கூட்டணி ஒப்பந்தம் போன்றே உள்ளது. அரசியல் சுயலாபங்களுக்காக குறிப்பிட்ட சில மாநிலங்களுக்கு மட்டும் நிதியை தாராளமாக அள்ளிக் கொடுத்தும், மதவாத அரசியலை தொடர்ந்து புறக்கணிக்கின்றன என்ற ஒரே காரணத்திற்காக நாட்டின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்து வரும் தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் மீது வன்மத்தைக் கக்கிடும் வகையில் இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கை அமைந்திருப்பது இந்திய மக்களாட்சி மற்றும் கூட்டாட்சித் தத்துவங்களைச் சிதைத்திடும் வகையில் அமைந்துள்ளது. நிதிநிலை அறிக்கை மூலம் தேர்தல் கணக்கை தீர்த்துக்கொள்ள ஒன்றிய பாரதிய ஜனதா கட்சி அரசு நினைத்திருப்பது வேதனைக்குரியது.

தமிழ்நாடு மிகப்பெரிய இரண்டு இயற்கைப் பேரிடரை எதிர்கொண்டது. 37 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பீட்டை தர வேண்டும் என தமிழ்நாடு அரசு தொடர்ந்து வலியுறுத்தி வந்தது. ஆனால், இதுவரை 276 கோடி ரூபாயைத் தான் ஒன்றிய அரசு அளித்துள்ளது. அது சட்டப்படி வரவேண்டிய தொகை தான். தமிழ்நாடு அரசு கேட்ட நிதியை பாஜக அரசு கருத்தில் கொள்ளவில்லை. ஆனால், உத்தரகாண்ட், சிக்கிம், இமாச்சலப் பிரதேசம் மற்றும் அஸ்ஸாம் போன்ற மாநிலங்கள் மட்டுமின்றி, பீகார் மாநிலத்திற்கு மட்டும் 11,500 கோடி ரூபாய் பேரிடர் தடுப்புப் பணிகளுக்காக வழங்கப்பட உள்ளது. இது, தமிழ்நாட்டு மக்களுக்குச் செய்யும் மிகப்பெரிய அநீதியாகும்.

தமிழ்நாட்டுக்கான எந்த சிறப்புத் திட்டமும் இந்த நிதிநிலை அறிக்கையில் இல்லை. தமிழ்நாடு என்ற சொல்லே நிதி நிலை அறிக்கையில் இல்லை என்று சொல்வதைவிட, ஒன்றிய பாஜக ஆட்சியாளர்களின் சிந்தனையிலும், செயலிலும் தமிழ்நாடு இல்லை. பாரபட்சமும், ஏமாற்றமும் தான் இந்த அறிக்கையில் இருக்கிறது. ஒரு நாட்டின் நிதி நிலை அறிக்கை என்பது அந்த நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து மாநிலங்களையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். அந்த வகையில், நிதி ஒதுக்கீட்டில் நீதி இல்லை. அநீதியே அதிகம் உள்ளது.

ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் மாற்றாந்தாய் போக்குடன் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. ஒன்றிய அரசைக் கண்டித்து சனிக்கிழமை காலை 10.00 மணியளவில், மாவட்ட தலைநகரங்களில் தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. தலைமைக்கழக உத்தரவின்படி இந்த ஆர்ப்பாட்டத்தில் மீனவரணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் பங்கேற்க வேண்டும்.

இவ்வாறு அவர் அறிக்கை விடுத்துள்ளார்.

### எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களை வஞ்சிக்கும்

## நீதியில்லாத நிதிநிலை அறிக்கை!

### தீக்கதிர் நாளேடு தலையங்கம்!

சென்னை, ஜுலை 27-

ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை, எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களை வஞ்சிக்கும் நீதி யில்லா நிதிநிலை அறிக்கை என்று 'தீக்கதிர்' நாளேடு தலையங்கம் தீட்டியுள்ளது.


தீக்கதிர்
நீதியில்லாத நிதிநிலை அறிக்கை

அது வருமாறு:-

ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்த 202425ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை தமிழ்நாடு, கேரளம் உள்ளிட்ட எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்களை வஞ்சிப்ப தாக அமைந்துள்ளது. தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களின் பெயர் கூட நிதி நிலை அறிக்கை யில் இடம்பெறவில்லை என்று இந்தியா கூட்டணிக் கட்சி எம்.பி.க்கள் குற்றம்சாட்டிய தோடு அவையிலிருந்து வெளிநடப்பு செய்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த குற்றச்சாட்டிற்கு பதிலளித்த நிர்மலா சீதாராமன் அனைத்து மாநிலங்களின் பெயர் களும் பட்ஜெட்டில் இடம் பெற வேண்டும் என்று அவசியம் இல்லை என்று ஆணவமாக பதிலளித்துள்ளார். பாஜக பெரும்பான்மை பெறாத நிலையில் தெலுங்குதேசம் மற்றும் ஐக்கிய ஜனதா தளத்தின் ஆதரவுடன்தான் ஆட்சியை தக்கவைத்துக் கொண்டுள்ளது.

இதற்கு நன்றிக்கடனாகவும், கூட்டணிக் கட்சிகளை தாஜா செய்யும் வகையிலும், ஆந்திர மாநிலத்திற்கு 15ஆயிரம் கோடி ரூபாய் சிறப்பு நிதியும் பீகாருக்கு மட்டும் வெள்ளத்தடுப்பு பணி களுக்காக 11ஆயிரத்து 500 கோடியும் ஒதுக்கப் படும் என நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இந்த இரண்டு மாநிலங்களின் பெயர்களும் சிறப்பாக நிதிநிலை அறிக்கையில் இடம்பெற்றிருப்பதன் பின்னணி என்ன?

தமிழகம் தொடர்ச்சியாக இயற்கைப் பேரிட ரால் பாதிக்கப்பட்டு வந்த போதும் நரேந்திர மோடி அரசு வன்மத்துடன் தொடர்ந்து வஞ்சகம் செய்து வந்துள்ளது. தமிழ்நாட்டிற்கு புயல் மற்றும் வெள்ளத்தால் ரூ.37 ஆயிரம் கோடி அளவிற்கு இழப்பு ஏற்பட்டுள்ள நிலையில், வெறும் 277 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கப்பட்டது. இந்த நிதி நிலை அறிக்கையில் ஒரு பைசா கூட ஒதுக்கப்படவில்லை. இது பாரபட்சமின்றி வேறென்ன?

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தலைமை யிலான இடது ஜனநாயக முன்னணி ஆளும் கேரள மாநிலத்தை நரேந்திர மோடி அரசு தொடர்ந்து வஞ்சித்து வருகிறது. கர்நாடக மாநிலத்திற்கும் இந்த பட்ஜெட்டில் உரிய நிதி ஒதுக்கீடு இல்லை. பாஜக ஆளும் உ.பி. மாநிலம் நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில் பாஜகவை காலை வாரி விட்டதால் அந்த மாநிலத்தையும் மோடி அரசு புறக்கணித் துள்ளது. இதுவரை இருந்த எந்தவொரு ஒன்றிய அர சும் இந்த அளவுக்கு வன்மத்துடன் நடந்து கொண்டது இல்லை.

மக்களவைத் தேர்தலில் பெரும்பான்மை பெற முடியாத அளவுக்கு மோடி அரசை இந்திய வாக்காளர்கள் புறக்கணித்தனர். அதற்கு பழிவாங்கும் வாய்ப்பாக நிதிநிலை அறிக்கையை மோடி அரசு பயன்படுத்திக் கொண்டுள்ளது. இந்தப் போக்கு தொடருமானால் நாட்டின் கூட்டாட்சித் தத்துவம் கேள்விக்குறியாகும். ஒட்டுமொத்த இந்தியாவும் மோடி அரசை எதிர்த்தாக வேண்டிய கட்டாயத்தில் தள்ளப் பட்டுள்ளது.

இவ்வாறு தீக்கதிர் நாளேடு தலையங்கம் தீட்டியுள்ளது.